மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற அவசரக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் வருடம் மார்ச் மாதம் 16-ந் தேதி வெள்ளிகிழமை மாலை 4.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.கு.அசோக்குமார், பி.காம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1. தூய்மை பாரதம் திட்டம் 2016-17-ன் கீழ் இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் திருத்திய செயல்முறை கடிதம் ந.க.எண்:11088-8/2017/P3, நாள்:24.05.2017-ல் தெரிவித்துள்ளபடி வன்னிவேடு உரக்கிடங்கு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்காக மண் பரிசோதனை செய்து ஆய்வறிக்கை சான்று வழங்க ஆய்வு கட்டணத்தொகை ரூ.26,550/-ஐ The Principal, Thanthai Periyar Govt Institute of Technology, Vellore அவர்களுக்கு இத்தொகையினை வரைவோலையாக வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

   அலுவலகக்குறிப்பு:
   1)மன்றம் அனுமதிக்கலாம்.
   2)2017-18-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   3) The Principal, Thanthai Periyar Govt Institute of Technology, Vellore அவர்களுக்கு மேற்படி தொகையை வழங்கிட மன்றம்.
   4)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண்:1395/2016/இ1)

2. இந்நகராட்சியில் DAY-NULM SUH-4th PSC for 2017-2018-ம் ஆண்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாலாஜா அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தினுள் உட்புறநோயாளிகளின் உதவியாளர்கள் தங்க சிறப்பு தங்குமிடம் (Special Shelter) கட்டிடம் கட்டுவதற்காக மண் பரிசோதனை செய்து ஆய்வறிக்கை சான்று வழங்க ஆய்வு கட்டணத்தொகை ரூ.26,550/-ஐ The Principal, Thanthai Periyar Govt Institute of Technology, Vellore அவர்களுக்கு இத்தொகையினை வரைவோலையாக வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

   அலுவலகக்குறிப்பு:
   1)மன்றம் அனுமதிக்கலாம்.
   2)2017-18-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   3) The Principal, Thanthai Periyar Govt Institute of Technology, Vellore அவர்களுக்கு மேற்படி தொகையை வழங்கிட மன்றம்.
   4)பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம.
   (ந.க.எண்:2026/2016/இ1)

3. இந்நகராட்சியில் புதிய இணையதள மென்பொருள்(CWSS) பிப்ரவரி-2016-ல் பதிவேற்றம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்படி பதிவேற்றம் செய்யும் போது 2016-17 மற்றும் 2017-18-ம் ஆண்டிற்கு தொழில்வரியில் நிலுவை மற்றும் நடப்பில் அரசு மற்றும் அரசு சார நிறுவங்களில் பணிபுரியும் பெயரிலும் மற்றும் அரசு நிறுவனங்களின் பெயரிலும் இரண்டு முறையாக கேட்பு தவறுதலாக எழுப்பப்பட்டுள்ளது. அதற்கான பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் தொழில்வரியினை சம்மந்தப்பட்ட துறையின் பெயரியலேயே(பணியாளர்களின் பட்டியல்படி) ஒரே இரசீதாக போடப்பட்டு நடைமுறைப்படுத்துள்ளது. எனவே தவறுதலாக புதிய இணையதள மென்பொருள் எடுத்து கொள்ளப்பட்ட தொகை ரூ.555164/-யை (பட்டியலில் கண்டுள்ளப்படி) நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

2016-17-ம் ஆண்டின் இறுதியில் பிப்ரவரி-2017-ல் புதிய இணையதள மென்பொருள் பதிவேற்றம் செய்யும்போது தவறுதலாக தொழில்வரி கேட்பு எடுத்து கொள்ளப்பட்ட தொகை ரூ.555164/-யை(பட்டியலில் உள்ளப்படி) தொழில்வரி கேட்பிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:1674/2017/அ1)

4. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களை 2018-19 முதல் 2020-21 வரை மூன்றாண்டுக்கு 5% உயர்வு அடிப்படையில் 15.03.2018 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் மறு ஏலம் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்துக்கொண்டு உயர்ந்த ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தொகையினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வரிசை எண்:01 நகராட்சி பேருந்து நிலையம் சுங்ககட்டணம் பேருந்து நிலையத்திற்கு தினசரி வந்து போகும் அனைத்து பேருந்துகளுக்கும் ரூ.8/- சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் யாரும் கலந்துக்கொள்ளவில்லை.

வரிசை எண்:02 ஆடு அறுக்கும் தொட்டி சுங்க கட்டணம் உரிமைக்கு மூன்றாவது முறையாக கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம்

ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள்

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்த புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.பிச்சாண்டி,<br>கச்சலான் தெரு,<br>வாலாஜாபேட்டை | 2,21,100/- |

ஏலத்தில் கலந்து கொண்டவர்கள்

| | | |
|---|---|---|
| 1 | முரளி,<br>நெ:7/2,ஆற்காடு தெத்து தெரு,<br>வாலாஜாபேட்டை | 2,25,000/- |
| 2 | மல்லிகா,<br>நெ:13/2.சுவர்ணர்பேட்டை,<br>வாலாஜாபேட்டை | 2,26,000/- |

கேள்வி எண்:03 ினசரி நாளங்காடி 99 கடைகள் மற்றும் மக்கள் நடமாட்டத்திற்கு இடையூறு இல்லாமல் இயங்கும் கடைகள் சுங்க கட்டணம் உரிமைக்கு கீழ்கண்டுள்ளவாறு இரண்டு நபர்கள் ஏலத்தில் மட்டும் கலந்துகொண்டனர் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

| | | |
|---|---|---|
| 1 | முரளி,<br>நெ:7/2,ஆற்காடு தெத்து தெரு,<br>வாலாஜாபேட்டை | 6,58,100/- |
| 2 | மல்லிகா,<br>நெ:13/2.சுவர்ணர்பேட்டை,<br>வாலாஜாபேட்டை | 6,58,000/- |

வரிசை எண்:04 மாடு அறுக்கும் தொட்டியில் சுங்ககட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு மறுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்துகொள்ளவில்லை.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ)வரிசை எண் 1 மற்றும் 4 மறுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)வரிசை எண்:02-ல் கண்டுள்ள ஆடு அறுக்கும் தொட்டிக்கு திரு.பிச்சாண்டி என்பவர் ரூ.2,21,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி தொகை கொடுத்துள்ளார். திருமதி.கே.மல்லிகா என்பவர் ரூ.2,26,000/-க்கு உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ளார். இத்தொகையானது ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,21,000/-யைவிட ஏலக்கேள்வி தொகை உயர்வாக உள்ளது. மேலும் ஏலக்கேள்வி தொகை ரூ.2,26,000/-க்கு சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.1,98,450/-க்கு ரூ.27,550/- அதிகமாக உள்ளது. மேலும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.189150/-க்கு ரூ.36850/-யை அதிகமாக உள்ளது. மேலும் 2017-18-ம் ஆண்டிற்கு குத்தகை தொகை செலுத்தாததாலட துறை மூலம் வசூல் செய்யப்பட்டதில் ஜனவரி-2017 வரை ரூ.316300/-யை வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்தொகைக்கு ரூ.90000/-யை குறைவாக உள்ளது. மேலும் பணியாளரின் ஊதியம் மற்றும் இதர செலவினங்களை கருத்தில் கொண்டு உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ.2,26,000/-யை மன்றம் அங்கீகரிக்கலாம்

இ)வரிசை எண் 03-ல் கண்டுள்ள தினசரி நாளங்காடி 99 கடைகளுக்கு சுங்ககட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு திரு.முரளி என்பவர் ரூ.658100/-க்கு உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ளார். இத்தொகையானது சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.617400/-க்கு ரூ.40700/-யை அதிகமாக உள்ளது. மேலும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.588466/-க்கு ரூ.69634/-யை அதிகமாக உள்ளது. எனவே திரு.முரளி என்பவர் கேட்டுள்ள உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ.658100/-யை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ஈ)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வரிசை எண் 1 மற்றும் 4 மறுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்:2870/2017/அ1)

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரணக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் வருடம் மார்ச் மாதம் 28-ந் தேதி புதன்க்கிழமை மாலை 4.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.கு.அசோக்குமார், பி.காம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

1. வாலாஜாபேட்டை நகராட்சி, பொதுசுகாதாரப்பிரிவிற்கு 24 வார்டுகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டெங்கு பணி செய்வதற்கு ஆதாரமாக வீடு வீடாக சுவரில் ஒட்டுவதற்கான (டெங்கு பணி ஸ்டிக்கர்) 10000 எண்ணிக்கை தேவைப்படுவதால், அதனை வாங்கிக்கொள்ள தோராய செலவினம் ரூ.50,000/-க்கு நகரமன்ற தீர்மான எண்:212, நாள்:24.11.2017-ல் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | RAFIH Prints; Chennai. | 48000/- |
| 2 | FANCY AGENCY Chennai | 45000/- |

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி,வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்:2-ல் FANCY AGENCY Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 2017/எச்1)

2. இந்நகராட்சிக்கு சொந்தமான 24 வார்டுகளில் சமுதாய கழிப்பிடம் மற்றும் பொதுக்கழிப்பிடம்(SWACHH SURVEKSHAN) அடிப்படையில் சுகாதாரத்தை மேம்படுத்த மக்கள் அறிவும் வண்ணமாக ஒவ்வொரு கழிப்பறையிலும் நகராட்சி பராமரிப்பு 19 விளம்பர பலகை (Flex Board) வைக்க தோராய செலவினம் ரூ.40,000/-க்கு நகரமன்ற தீர்மான எண்:253, நாள்:29.12.2017-ல் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | RAFIH Prints; Chennai. | 39900/- |
| 2 | FANCY AGENCY Chennai | 38000/- |

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி,வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்:2-ல் FANCY AGENCY Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 2017/எச்1)

3. வாலாஜாபேட்டை நகராட்சியில், நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் பவன்சைபர் டெக், சென்னை என்ற சாப்ட்வேர் நிறுவனமும் இணைந்து அளித்த UTIS(Urban Tree Information System) என்ற சாப்ட்வேர் தொகுப்பின் மூலமாக கணினி வசூல் மையமும், அலுவலக கோப்புகளின் செயல்பாடுகளும் ஜனவரி-2017 முதல் நடைமுறைப்படுத்தபடுகின்றன. இதற்கு இணையதளமும் அதன் தடையில்லா வேகமும் மிகவும் முக்கியமானதாகும். இதன் வேகம் குறைந்தால் வரி வசூல் மையத்திலும், அலுவலக வேலையை முடித்து தருவதிலும் பின்னடைவு ஏற்படுகிறது. தற்போது BSNL மூலமாக இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டு இருந்தாலும் அடிக்கடி இதன் வேகம் குறைந்து வேலையை முடித்திட நேரம் எடுத்துக்கொள்கிறது.மேலும், சாலை பணி நடைபெறும் காலங்களில் கேபிள் இணைப்பு அறுந்து முழுவதுமாக இணைப்பு இல்லாமல் போகிறது. 8 MBPS speed plan என்று BSNL நிறுவனம் சொன்னாலும் நமக்கு mbps speed கூட கிடைப்பதில்லை.

எனவே, இதற்கு மாற்று தீர்வாக RAILWAYS DEPARTMENT மூலமாக வழங்கப்படுகின்ற RAIL WIRE என்ற இணையதள இணைப்பு பரவலாக மற்ற நகராட்சிகளிலும் பெறப்பட்டு செயல்பாடு நன்றாக உள்ளது. வேகம் குறையாமலும் இணையதள வசதி கிடைக்கிறது. எனவே, RAIL WIRE என்ற இணையதள வசதியை RAILWAY DEPARTMENT மூலமாக RAILWIRE இணையதள வசதியை ஏற்படுத்தி தருகின்ற வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட Sub contractor கள் மூலமாக RAILWIRE இணையதள வசதியை ஏற்படுத்திக்கொள்ளவும் இணையதள வேகம் 40 mbps என்ற அளவில் பெற்று பயன்பெறவும், அதற்காகும் ஆண்டிற்கான தோராய செலவினம் ரூ.40,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி சேவையை Raliware நிறுவனம் அங்கீகாரம் பெற்ற அவர்களுக்கு மேற்கண்ட தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:609/2018/சி1)

4. வாலாஜாபேட்டை நகராட்சியில் 24 வார்டுகளுக்கு தீவிர டெங்கு கொசு ஒழிப்பு பணி நடைபெற்று வருகின்றது. டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு அபேட் (Temephos 50% E.C.) இருப்பு குறைவாக உள்ளதால் அரசு அனுமதி பெற்ற நிறுவனத்தில் அபேட் (Temephos 50% EC) 100லிட்டர் வாங்கிக்கொள்ள தோராய செலவினம் தொகை ரூ.56932/- GST18% 10248/- மொத்த தொகை ரூ.67180/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட செலவினத்தை 2018-19-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:2624/2014/எச்1)

5. வாலாஜாபேட்டை நகராட்சியில் 24 வார்டுகளுக்கு தீவிர டெங்கு கொசு ஒழிப்பு பணி நடைபெற்று வருகின்றது. டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான புகை மருந்து அடிக்க பைரித்திரம் (Pyrethiram)2% இருப்பு குறைவாக உள்ளதால் அரசு அனுமதி பெற்ற நிறுவனத்தில் பைரித்திரம் 2% 100லிட்டர் வாங்கிக்கொள்ள தோராய செலவினம் தொகை ரூ.99300/-+GST(18%) 17874/- மொத்தம் தொகை ரூ.117174/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட செலவினத்தை 2018-19-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:2623/2014/எச்1)

6. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளை மறுவரன்முறை செய்ய தமிழ்நாடு வரன் முறைப்படுத்தும் உறுப்பினர் செயலர் அவர்களின் ஆணை எண்:D.C.ORDER/No:01/2017/TNDC/BG-1, நாள்:12.09.2017-ல் தெரிவித்துள்ளதற்கு இணங்க வார்டு மறுவரையனை கருத்துக்கள் மீதான ஆட்சேபணைகள் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்களிடமிருந்து ஆட்சேபணைகள் வரவேற்கப்படுகிறது என்ற அறிவிப்பை விளம்பரப்படுத்த தினசரி ஆங்கில நாளிதழ் மற்றும் தமிழ் நாளிதழ்களில் விளம்பரப்படுத்தப்பட்டது. விளம்பரப்படுத்தியதற்காக விளம்பரக்கட்டணம் கீழ்கண்டவாறு வழங்கிட கோரி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (விளம்பர)துறை இயக்குநர் அவர்களிடம் இருந்து அனுப்பப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | தினமணி | ரூ.2520/- |
| 2 | தின தந்தி | ரூ.2083/- |
| 3 | நியூஇந்தியன் எக்ஸ்பிரஸ் | ரூ.32360/- |
| | மொத்தம் | ரூ.37363/- |

மேற்கண்ட விளம்பரக்கட்டணம் ரூ.37363/-(முப்பத்தி ஏழாயிரத்து முன்னூற்றி அறுபத்தி மூன்று) வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:2294/2017/எப்1)

7. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.30322, நாள்.08.03.2018-ம் தேதிய கடிதத்தில் URBAN ADMINISTRATION BUILDING SOCIETY-க்கு புதியதாக கட்டிடம் கட்டும் பணிக்கு(இரண்டாம் நிலை நகராட்சி) இந்நகராட்சியின் 3வது தவணை பங்குத் தொகை ரூ.2,60,000/-ஐ பாரத ஸ்டேட் பாங்க் வங்கி, சென்னை கணக்கு எண். 33476552490-ல் செலுத்துமாறு கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன்படி இந்நகராட்சியின் பங்குத் தொகை ரூ.2,60,000/-ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. 2017-18ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.அவசர அவசியம் கருதி மன்றஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதியின் பேரில் பொதுநிதியிலிருந்து ரூ.2,60,000/-ஐ URBAN ADMINISTRATION BUILDING SOCIETYயின் பாரத ஸ்டேட் பாங்க் வங்கி, சென்னை கணக்கில் செலுத்தியதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்:- 0743/2016/இ1)

8. இந்நகராட்சி அலுவலக உபயோகத்தில் உள்ள 35KVA Generator ரேடியேட்டர் பழுதடைந்துள்ளதால் அதனை சர்வீஸ் செய்வதற்கும் மற்றும் Generator-ரின் Controller Push Button Service செய்வதற்கும் **Network Diesel Sales & Service,** வேலூார் அவர்களிடம் சர்வீஸ் செய்யவதற்கும் மற்றும் அதற்கான செலவீனத் தொகை ரூ.5900/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. 2017-18ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. **Network Diesel Sales & Service,** வேலூார் அவர்களுக்கு மேற்படி தொகையை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

4. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0753/2018/இ1)

9. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தினந்தோறும் குடிநீர் வழங்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து பகுதிகளில் உள்ள SUMP, OVER HEAD TANK, WATER DISTRIBUTION MAIN LINE, PUMPING MAIN LINE CWSS PIPE LINE, CHLORINATION UNIT (HYPO CHLORIDE) மற்றும் HEAD HOUSE இவை அனைத்தும் விவரிக்கும் வகையில் அடங்கிய வரைபடம் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் முன்னிலையில் சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ள தெரிவிக்கப்பட்டதின் பேரில் அனைத்து வரைபடங்களும் PRIVATE COMPUTER CAD Center-ல் தயார் செய்து அறிக்கை சமர்ப்பித்திட தனிஅலுவலர் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| S.No | Work Details | K.Mouli, KM Design & Drafts Construction, (Rate for Hours & Numbers) | LASER DESIGN & DRAFTS (Rate for Hours & Numbers) |
|---|---|---|---|
| 1. | Chlorination Map Drawing Work in Cad – (1Hr Rs.) | 500.00 | 550.00 |
| 2. | A0 Colour Print Copy( 1No) | 1250.00 | 1300.00 |
| 3. | Zonation Map Drawing Work in Cad – (1Hr Rs.) | 500.00 | 550.00 |
| 4. | A0 Colour Print Copy( 1No) | 1250.00 | 1300.00 |
| 5. | A3 Colour Print Copy( 1No) | 200.00 | 300.00 |

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் K.Mouli, KM Design& Drafts Construction அவர்களின் குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மற்றும் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண்:-2786/2017/இ1.</u>

10. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/08/கு.வ.2, நாள்.21.09.2009ன் படி புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு புதிய வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட சுற்றறிக்கையில் வழிமுறைகள் எண்.2 (ஊ)ன் படி, புதிய குடிநீர் இணைப்புகள் பெறுவதற்காக ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை சீரமைப்பு மற்றும் இதர தொகைகள் முந்தைய ஆண்டின் தொகையில் 5% உயர்த்தப்பட வேண்டும். மற்றும் (ஏப்ரல் 1ம் தேதி முதல்) விண்ணப்ப படிவம் எந்த நிதியாண்டில் வழங்கப்பட்டு தொகை செலுத்தப்படுகிறதோ அந்த நிதியாண்டிற்க்கான தொகைகள் வசூலிக்கப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சுற்றயிக்கையின்படி, 2018-19-ம் ஆண்டிற்கான புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக கீழ் கண்டுள்ள விவரப்படி புதிய குடிநீர் இணைப்புக் கட்டணத்திற்கான சாலை சீரமைப்புக் கட்டணம் 5% மற்றும் சாலை சீரமைப்புக் கட்டணத்தில் மேற்பார்வை கட்டணம் 20% தொகையினை மாற்றியமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

| **நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் (2017-18)** | **கருங்கல் ஜல்லி சாலை.ரூ** | **தார்சாலை ரூ** | **சிமெண்ட சாலை ரூ** |
|---|---|---|---|
| **சாலை சீரமைப்பு கட்டணம** | | | |
| 0-30 மீட்டர் நீளத்திற்கு | 1551 | 3325 | 3841 |
| 30-90 மீட்டர் நீளத்திற்கு | 2438 | 4211 | 4727 |
| **மேற்பார்வை கட்டணம்** | | | |
| 0-30 மீட்டர் நீளத்திற்கு | 310 | 665 | 768 |
| 30-90 மீட்டர் நீளத்திற்கு | 488 | 842 | 945 |

**2018-19 ஆண்டு ஏப்ரல் முதல் சாலை சீரமைப்பு கட்டணம் 5% உயர்த்தி நிர்ணயம் செய்யப்படவேண்டிய தொகை விவரம்**

| வருடம் | நீளம் | கருங்கல் சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|---|
| 2018-19 | 0-30 மீட்டர் | 1629 | 3492 | 4033 |
| | 30-90 மீட்டர் | 2560 | 4422 | 4964 |

**2018-19 ஆண்டு ஏப்ரல் முதல் சாலை சீரமைப்பு கட்டணத்தில் மேற்பார்வை கட்டணம் 20% உயர்த்தி நிர்ணயம் செய்யப்படவேண்டிய தொகை விவரம்**

| வருடம் | நீளம் | கருங்கல் சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|---|
| 2018-19 | 0-30 மீட்டர் | 326 | 699 | 807 |
| | 30-90 மீட்டர் | 512 | 885 | 993 |

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2018-19ம் ஆண்டு நிர்ணயம் செய்த புதிய குடிநீர் இணைப்புக் கட்டணத்திற்கான சாலை சீரமைப்புக் கட்டணம் 5% மற்றும் சாலை சீரமைப்புக் கட்டணத்தில் மேற்பார்வை கட்டணம் 20% தொகையினை மாற்றியமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0877/2017/இ1.)

11. இந்நகராட்சிக்கு சொந்தமான பாலார் வன்னிவேடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் குடிநீரில் திரவ குளோரின் கலந்து பாதுகாப்பான குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. 2018-19-ம் ஆண்டிற்கு திரவ குளோரின் சப்ளை செய்திட மதீப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-19ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0740/2018/இ1.)

12. இந்நகராட்சிக்கு சொந்மதான வன்னிவேடு தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள அனைத்து மின்மோட்டார்கள் கேபிள் லைன்கள், பைப் லைன்கள் மற்றும் சோளிங்கர்ரோடு தரை மட்ட நீர்தேக்க தொட்டி மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் உள்ள தரை மட்ட நீர்தேக்க தொட்டிகளில் உள்ள மின்மோட்டார்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் அவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யவும் இப்பணிக்கான 2018-19-ம் ஆண்டிற்கான (ஒரு வருடத்திற்கு) தோராய மதிப்பீட்டு தொகை ரூ.9.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2018-19-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0741/2018/இ1)

13. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து மெயின் பைப் லைன்கள், பகிர்மான பைப் லைன்கள் லிக்கேஜ், பைப் லைன் உடைப்பு, அடைப்புகள் மற்றும் நகர பகுதியில் உள்ள அனைத்து கேட் வால்வுகள் Air வால்வுகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் அவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யவும் இப்பணிக்கான 2018-19-ம் ஆண்டிற்கான (ஒரு வருடத்திற்கு) தோராய மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2018-19-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0742/2018/இ1)

14. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து சிறுமினி பவர் பம்ப்கள், அவற்றின் மின்மோட்டார்கள், கேபிள் லைன்கள், சிறுதொட்டிகள் (Plastic HDPE Tank) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் அவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யவும் இப்பணிக்கான 2018-19-ம் ஆண்டிற்கான (ஒரு வருடத்திற்கு) தோராய மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2018-19-ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(<u>ந.க.எண்:0743/2018/இ1</u>)

15. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அம்மா உணவகத்தில் சமையல் பணிக்காக அமைக்கப்பட்டுள்ள கருவிகள் அவ்வப்போது பழுதடைந்துவிடுவதால் சமையல் பணியினை மேற்கொள்வதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இதனை தவிர்க்கும் பொருட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் அவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யவும் இப்பணிக்கான 2018-19-ம் ஆண்டிற்கான (ஒரு வருடத்திற்கு) தோராய மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2018-19ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(<u>ந.க.எண்:0745/2018/இ1</u>)

16. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின்விளக்குகள் மற்றும் அதனை சார்ந்த கருவிகள் அவ்வப்போது பழுதடைந்துவிடுவதால் இரவில் பொது மக்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இதனை தவிர்க்கும் பொருட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் அவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யவும் இப்பணிக்கான 2018-19-ம் ஆண்டிற்கான (ஒரு வருடத்திற்கு) தோராய மதிப்பீட்டு தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.2018-19ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(<u>ந.க.எண்:0744/2018/இ1</u>)

17. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16, ஆதித்தனார் தெருவிலுள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் சுற்றுசுவர் இல்லாததால் இப்பூங்காவினை ஆக்கிரமிப்பு செய்ய முயற்ச்சிக்கின்றனர். எனவே இந்நகராட்சி இடத்தினை பாதுகாக்க மேற்படி இடத்தில் பூங்காவினை சுற்றி சுற்றுசுவர் மற்றும் குழந்தைகள் விளையாடி மகிழு விளையாட்டு பொருட்கள் அமைக்கவும் ஆகும் மொத்த தோராய செலவீனத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-19ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0739/2018/இ1)

18. இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு போக்குவரத்து துறையிடம் இருந்து புதுப்பித்தல் சான்று பெறவுள்ளதால் பேருந்து நிலையத்தில் உள்ள இடத்தனை சுத்தம் செய்து அவ்விடத்தில் உள்ள சுவற்றிற்கு வண்ணம் அடிக்க வேண்டியுள்ளதால் இப்பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவீனத் தொகை ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-19ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0746/2018/இ1)

19. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறையில் உள்ள குளிர்சாதன பெட்டி (AC) பழுதடைந்து உபயோகபடாத நிலையில் உள்ளதால் புதியதாக 1.5 Ton குளிர்சாதன பெட்டி (AC) பொருத்தவும், அவ்விடத்தில் உள்ள சுவற்றிற்கு வர்ணம் அடிக்கவும் மற்றும் அலுவலக உட்புறத்தில் உள்ள கனிணி வரிவசூல் மையத்தின் வெளிப்புறத்தில் நிழற்குடை அமைக்க வேண்டியுள்ளதால் இப்பணிகளை மேற்கொள்ள ஆகும் தோராய செலவீனத் தொகை ரூ.1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.2018-19ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0756/2018/இ1)

20. இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளுக்கு டெங்கு காய்ச்சல் பரப்பும் ஏடீஸ் (ADS) கொசு உற்பத்தியினை தடுக்கும் பணிக்காக 30 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் அபேட் மருந்து தெளிக்கும் பணிக்கு ஒரு நபர் ஒன்றுக்கு ரூ.205/- வீதம் வழங்க ந.க.எண்:73, நாள்:30.06.2016-ன்படி செலவினத்தொகை மன்றம் அனுமதி பெறப்பட்டு தற்பொழுது கூடுதலாக தொகை ரூ.2,81,720/-க்கும் 2018-19-ம் ஆண்டிற்க்கு உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு தனி அலுவலரின் முன அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

`தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.